**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 07.02.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## 7வது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோவை மலர் கண்காட்சி -2025

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தாவரவியல் பூங்காவில் மலர்களின் இரகங்களையும், வண்ணங்களையும், அழகினையும் அதன் வணிக முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் 7வது மலர் கண்காட்சி பிப்ரவரி மாதம் 8ம் நாள் முதல் 12வது நாள் வரை சிறப்பாக நடைபெற இருக்கிறது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். இம்மாபெரும் மலர் கண்காட்சியில் பள்ளிக் குழந்தைகள், மாணவர்கள், பொதுமக்கள் வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் தொழில் முனைவோர் கண்களுக்கு வண்ண வண்ண மலர்கள் விருந்தளிக்க காத்திருக்கிறது.

செலோசியா, மல்லிகை, செண்டுமல்லி, சம்பங்கி, கனகாம்பரம், தாமரை, செவ்வந்தி, ஆஸ்டர், பெட்டூனியா, ஜினியா, டேலியா, சால்வியா, பேன்சி, பிளாக்ஸ் போன்ற மலர்களைக் கொண்டும், ரோஜா, கார்னேசன், ஆர்க்கிட், ஆந்தூரியம், லில்லியம், ஜெர்பெரா, லிஸியான்தஸ், ஹெலிகோனியா, ஜிப்ஸோபில்லா, ஸ்டேடிஸ் மற்றும் சொர்கத்து பறவை போன்ற கொய் மலர்களாலும் கலை நயத்துடன் பல்வேறு உருவ அமைப்புகளாக அலங்கரிக்கப்பட உள்ளன.

### *மலர்கண்காட்சியின் முக்கியத்துவம்*

*தமிழ்நாட்டில் வளரக்கூடிய அனைத்து மலர்களையும் தொட்டிகளில் வளர்த்தி வண்ணமயமான மலர்களுடன் இயற்கை வள பாதுகாப்பு, சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை பேணல், மலர்களின் முக்கியத்துவம் மற்றும் வணிக மதிப்பு ஆகியவற்றை பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு பறைசாற்றுவதே இக்கண்காட்சியின் நோக்கமாகும். தோட்டக்கலை மற்றும் வேளாண் வல்லுனர்கள், மலர் வணிகத்தில் தொழில் முனைவோர் மற்றும் மலர் அலங்கார நிபுணர்கள் ஆகியோர் ஒருங்கே கூடி தங்கள் எண்ணங்களையும், திறமைகளையும் கொண்டு இந்த மலர் கண்காட்சியினை சிறப்புற உருவகப்படுத்த இருப்பதால் இந்த ஐந்து நாள் மலர் கண்காட்சி கோவை மற்றும் மற்ற மாவட்ட பொது மக்களுக்கு தங்கள் வேலைப்பளு மற்றும் கவலைகளை மறந்து கொண்டாடும் ஒரு மலர்த்திருவிழாவாகவும், வசந்தத்தை வரவேற்கும் முகமாகவும் அமையவிருக்கிறது.*

### *மலர்க்கண்காட்சியின் சிறப்பம்சங்கள்*

*மலர்களின் மாண்புகளை பறைசாற்றும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள மலர்க்கண்காட்சியின் சிறப்பம்சங்கள்.*

- *நமது நாட்டில் உற்பத்தி செய்யும் கொய்மலர் மற்றும் உதிரி மலர்களைக் கொண்டு பல்வேறு அலங்கார அமைப்புகள்.*
- *அழகிய வானவில், அன்னப்பறவை, தமிழ்மறவன், விண்ணைத்தொடும் மலர்வளைவுகள், மலர்கோபுரங்கள் போன்ற எழில்மிகு உருவங்கள் தொட்டிச் செடிகளைக் கொண்டு காட்சிப்படுத்தப்பட உள்ளன.*
- *மேலும் அரிய வகை ஆர்கிட், ஆந்தூரியம் எழில்மிகு கற்றாழை மற்றும் கள்ளிச் செடிகள் பார்வைக்கு விருந்தளிக்க உள்ளன.*
- *உலர் மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பல்வேறு உலர் மலர் அலங்கார கைவினைப் பொருட்கள் மற்றும் 'இக்கிபானா' என்ற ஜப்பானிய வகை அலங்கார அமைப்புகள் பல்வேறு வடிவங்களுடன் அலங்கரிக்கப்பட உள்ளன.*
- *வீட்டுக்காய்கறித் தோட்ட மாதிரிகள், மாடித்தோட்ட மூலிகைச் செடிகள் மற்றும் தொட்டிச் செடிகள்.*
- *போன்சாய் எனப்படும் ஜப்பானிய குட்டை மரங்கள்.*
- *மலர்களால் வடிவமைக்கப்பட்ட இயற்கை அழகுடன் மழைக்காடுகள் இந்த மலர்க் கண்காட்சியின் முக்கியப் பகுதியாகும்.*
- *பல்வேறு வகையான வீட்டினுள் வளர்க்ககூடிய அழகிய செடிகள்.*

இந்த மலர் கண்காட்சியில் மலர்களோடு மனம் மகிழ இசை நிகழ்ச்சி மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டு திடல் போன்ற அம்சங்களை மலர்க் கண்காட்சி நடைபெறும் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**பொருட்காட்சி அரங்குகள்**

தோட்டக்கலை சார்பு நிறுவனங்கள், வேளாண்மை சார்ந்த தொழில் நிறுவன்ங்கள், வங்கிகள், கல்வி நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் சித்த மருத்துவ துறைகள் ஆகியவை இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பொருட்காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட வணிக அரங்குகள் இவ்விழாவில் அமைக்கப்பட உள்ளன.

**மக்கள் தொடர்பு அலுவலர்**